


கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், அரூர் மற்றும் வந்தவாசி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், நகரப்பட்டி விநாயகர் திருக்கோவில் அருகில் உள்ள குளத்தை சுற்றி கட்டப்பட்டுள்ள தடுப்புச்சுவரினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் ப.கோகுல்சிங் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# விஜய் தாமதமாக வந்ததே 41 பேரின் உயிரிழப்புக்கு காரணம்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலர் எம்.ஏ.பேபி பேட்டி!

கரூர், அக்.6-

**கரூர் பிரச்சாரத்துக்கு த.வெ.க. தலைவர் விஜய் காலதாமதமாக வந்ததே 41 பேரின் உயிரிழப்புக்கு காரணம் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் எம்.ஏ. பேபி தெரிவித்தார்.**



கரூர் வேலுச்சாமிபுரத்தில் விஜய் பிரச்சாரக் கூட்ட நெரிசல் ஏற்பட்ட இடத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலர் எம்.ஏ.பேபி தலைமையில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர்கள் ராதாகிருஷ்ணன், சிவதாசன், திண்டுக்கல் மக்களவை உறுப்பினர் சச்சிதானந்தம், கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர் வாசுகி, நாகை சட்டப்பேரவை உறுப்பினர் நாகை மாலிக், மாநில குழு உறுப்பினர் பாலா உள்ளிட்டோர் வெள்ளிக்கிழமை பார்வையிட்டனர். தொடர்ந்து அப்பகுதியினரிடம் சம்பவம் குறித்துக் கேட்டறிந்தனர். பிறகு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் எம்.ஏ.பேபி கூறியதாவது:-

விஜய் பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த சந்திரா என்பவரது மகன் சக்திவேல் கல்லூரி படிப்பை பாதியில் நிறுத்தியுள்ளார். அவரது படிப்பைத் தொடரவும், அவரது கல்விச்செலவை ஏற்கவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடவடிக்கை எடுக்கும். சம்பவம் குறித்து விசாரிக்க அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. அவரது விசாரணை நம்பகத்தன்மை கொண்டதாக இருக்கும்.

இச்சம்பவத்தில் அரசின் துரித நடவடிக்கையால்தான் ஏராளமானோர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

த.வெ.க. ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தை முறையாக ஏற்பாடு செய்யவில்லை. விஜய் 7 மணி நேரம் காலதாமதமாக வந்துள்ளார். அதுவே உயிரிழப்புகளுக்கு காரணமாக அமைந்துள்ளது.

இனி இதுபோன்ற சம்பவம் நடக்காமல் இருக்க நீதித் துறை, விசாரணை ஆணையம், அரசியல் கட்சிகள் என அனைவரும் ஒன்று சேர்ந்து பொதுவான விதி முறையை வகுக்க வேண்டும். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கவேண்டும். போலீஸார் தனிப்படை அமைத்து விசாரணை நடத்தி வரும் நிலையில் சி.பி.ஐ. விசாரிக்கத் தேவையில்லை என்றார் அவர்.



திருவெறும்பூர் தொகுதியில் கூத்தைப்பார் பேரூர் மக்களுக்காக அன்பில் அறக்கட்டளை அப்பல்லோ மருத்துவமனையுடன் இனைந்து மாபெரும் இலவச மருத்துவ முகாமினை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார். முகாமில் ரத்தத்தில் சர்க்கரையின் அளவு, ரத்த அழுத்தம் சரிபார்த்தல், இசிஜி எடுத்தல், நுரையீரல் பரிசோதனை நடைபெறுகிறது பொது மருத்துவர் ஆலோசனை வழங்கப்படுகிறது . முகாமில் அன்பில் அறக்கட்டளையின் சார்பாக முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு முதலுதவி பெட்டி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பேரூர் கழகச் செயலாளர் தங்கவேலு, பேரூர் மன்ற தலைவர் செல்வராஜ், மருத்துவர்கள் சுரேஷ், தமிழரசன், கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் – வனத்துறை சார்பில்

# அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாக்க ரூ.1 கோடி செலவில் முன்னோடித் திட்டம்!

### தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, அக்.6

தமிழ்நாடு அரசு அழிவின் விளிம்பில் உள்ள சிங்கவால் குரங்கு, சென்னைமுள்ளெலி, வரிக் கழுதைப்புலி மற்றும் கூம்புதலை மஹ்சீர் மீன் ஆகிய உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக 1.00 கோடி ரூபாய் செலவில் ஒரு முன்னோடித் திட்டத்தை தொடங்குகிறது.

மார்ச் 2025ல் சட்டமன்றத்தில் வனத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்த திட்டம், தமிழ்நாட்டின் பல்லுயிர் பாதுகாப்பு உத்தியின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைக் குறிக்கிறது, பெரிய உயிரினமான யானைகள் மற்றும் புலிகள் போன்றே சுற்றுச்சூழல் சமநிலையை பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களை பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது.

இது தொடர்பாக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அரசாணை வெளியிட்டுள்ளது.

மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளைக் கொண்ட தமிழ்நாடு, உலகளவில் பல்லுயிர் பெருக்க மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு முயற்சிகள் வரலாற்று ரீதியாக உயிரினங்களில் கவனம் செலுத்தியுள்ளன, ஆனால் விளிம்பின் நிலையில் அறியப்பட்ட உயிரினங்கள் வாழ்விட இழப்பு, வேட்டையாடுதல், சாலை இறப்பு, சுற்றுச்சூழல் புறக்கணிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அழுத்தங்கள் காரணமாக தொடர்ந்து அழிவின் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன.

இந்த இனங்கள் ஒவ்வொன்றும், எப்போதும் பொதுமக்களின் பார்வையில் இல்லாவிட்டாலும், மகரந்தச் சேர்க்கை, விதை பரவல், நோய் கட்டுப்பாடு மற்றும் நீர் அமைப்பு மறுசீரமைப்பு போன்ற செயல்பாடுகள் மூலம் சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத பங்களிப்பை வழங்குகின்றன.

இந்தத் திட்டம் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த நான்கு இனங்களை இலக்காகக் கொண்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் அழிந்து வரும் விலங்கினமான சிங்கவால் குரங்குகள் வரையறுக்கப்பட்டவனப்பகுதிகளில் வாழ்கிறது.

இரவு நேர மற்றும் மறைவு வாழ்க்கை முறை கொண்ட சென்னை முள்ளேலி, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளாவின் வறண்ட நிலப்பரப்புகளில் காணப்படுகிறது, இருப்பினும் இது போதுமான அளவு ஆய்வு செய்யப்படாமலும் பாதுகாப்பின்றியும் உள்ளது.

கிட்டத்தட்ட அச்சுறுத்தலுக்கு உள்ளான இனமாகவும் இயற்கை தோட்டியாகவும் இருக்கும் வரிக் கழுதைப் புலி, நோய்களைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது, ஆனால் முதுமலை புலிகள் காப்பக நிலப்பரப்பில் விரைவான சரிவை எதிர்கொள்கிறது. மோயார் ஆற்றில் ஒரு காலத்தில் ஏராளமாக இருந்த கூம்புதலை மக்காக், இப்போது அணை கட்டுமானம், அழிவுகரமான மீன்பிடி நடைமுறைகள், மாசுபாடு மற்றும் ஆக்கிரமிப்பு காரணமாக மிகவும் அழியும் நிலையில் உள்ளது.

சிங்க வால் குரங்கு பாதுகாப்புக்காக மொத்தம் ரூ. 48.50 லட்சம், மெட்ராஸ் முள்ளம்பன்றிக்கு ரூ.20.50 லட்சம், வரிகழுதைப்புலிக்குரூ.14 லட்சம், மற்றும் கூம்புத் தலை மஹ்சீருக்கு ரூ.17 லட்சம் என மொத்தம் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி வாழ்விட கண்காணிப்பு, நீண்டகால மக்கள் தொகை ஆய்வுகள், பாதுகாப்பு இனப்பெருக்க மையங்களை அமைத்தல் மற்றும்

சிங்கவால் குரங்குகளை பாதுகாக்க சுற்றுச்சூழல் ஆய்வுகள். வன இணைப்பை உறுதி செய்வதற்கான பாலங்கள், பள்ளிகள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் கல்வித் திட்டங்கள், பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் அறிவிப்பு பலகைகள் மற்றும் முன்னணி வன ஊழியர்களுக்கான பயிற்சி ஆகியவை அடங்கும். கூம்புத் தலை மஹ்சீருக்கு, ஆற்றங்கரை மீன்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அவற்றின் வசிப்பிடத்திலேயே வளர்ப்பு, இனப்பெருக்கம் மற்றும் விடுவிப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

இந்த முயற்சியின் விளைவுகள் தொலைநோக்குடையதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள்தொகை நிலை, அச்சுறுத்தல்கள் மற்றும் வாழ்விடத் தரம் குறித்த அடிப்படைத் தரவு முறையாக உருவாக்கப்படும், இது நீண்டகால உத்திகளுக்கு அறிவியல் அடித்தளத்தை வழங்கும். பாதுகாப்பு நடவடிக்கைகள் மனிதவன விலங்கு மோதலைக் குறைக்கும், சுற்றுச்சூழல் மீள்தன்மையை மேம்படுத்தும், மேலும் முக்கிய முயற்சிகளில் பெரும்பாலும் அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாக்க மாநிலத்தின் தயார்நிலையை வலுப்படுத்தும். சமூகங்கள் தீவிரமாக ஈடுபடும், இந்த அழிந்து வரும் உயிரினங்கள் குறித்த விழிப்புணர்வு, உரிமை மற்றும் நேர்மறையான அணுகுமுறைகளை வளர்க்கும். வனத்துறை ஊழியர்களின் திறன் மேம்படுத்தப்படும், அதே நேரத்தில் மழைக்காடுகள், வறண்ட நிலங்கள் மற்றும் நதி அமைப்புகள் போன்ற முக்கியமான வாழ்விடங்களின் சுற்றுச்சூழல் ஆரோக்கியம் நீண்டகால முன்னேற்றத்தைக் காணும்.

தமிழ்நாட்டின் இந்த அறிவிப்பானது அழிவின் விளிம்பில் உள்ளவற்றை பாதுகாப்பதற்கான ஒரு மைல்கல் ஆகும். இதில் 2022–ஆம் ஆண்டில் பாக் விரிகுடாவில் இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பு காப்பகம் உருவாக்கப்பட்டது. 2022ல் கடவூர் தேவாங்கு சரணாலயம் மற்றும் 2023–இல் நீலகிரி வரையாடு திட்டம் தொடங்கப்பட்டது ஆகியவை அடங்கும்.

சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியமான உயிரினங்களைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், தமிழ்நாடு மீண்டும் ஒருமுறை பல்லுயிர் பாதுகாப்பில் தனது தனித்தன்மையை நிரூபித்துள்ளது. இந்த முயற்சி குன்மிங்மாண்ட்ரீல் உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பின் 30x30 இலக்குகளுடன் ஒத்துப்போகிறது, இது உலகளாவிய காலநிலை மற்றும் பல்லுயிர் இலக்குகளுக்கான தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## கரூர் துயரசம்பவம்:

# உயர்நீதிமன்றம் சரியாகத்தான் சொல்லி இருக்கிறது !

## திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

திருச்சி, அக்.6-

திருச்சி சோமரசம்பேட்டையில் 30 லட்சம் மதிப்பீட்டில் சித்த மருத்துவ கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என் நேரு பங்கேற்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் சரவணன், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி உள்ளிட்ட சித்த மருத்துவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர் கே.என்.நேரு கூறுகையில்.



ஏற்கனவே செயல்பட்டுக்கொண்டிருந்த சித்த மருத்துவமனை 30 லட்சம் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்வதற்காக அடிக்கல் நாட்டடப்பட்டுள்ளது.

கரூர் சம்பவத்திற்கு தி.மு.க.தான் பொறுப்பேற்க வேண்டும் என எடப்பாடிகூறியது என்ற கேள்விக்கு, அவர் வேறு என்ன சொல்ல முடியும் செய்ய முடியும், நேற்று முதலமைச்சர் கூறியதை கேட்டீர்களா? தமிழகத்தில் பல்வேறு பிரச்சினைகள் நடைபெற்று வருகிறது, வெள்ளம்வந்தது அதற்கு கூட பணம் வழங்கவில்லை அப்போதுகூட வராத பா.ஜ.க. எம்.பி.க்கள்குழு உடனடியாக இந்த நிகழ்வுக்கு வருவதற்கு காரணம் என்ன என்றும் முதல்வர் கேள்வி எழுப்பியுள்ளார் அதுமட்டுமின்றி, பா.ஜ.க. கூட்டணியில் அ.தி.மு.க.வும் இருப்பதால் அது போன்றுதான் பேசுவார், மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள் நீதி மன்றத்தில் கூறியதுதான் உண்மை நிலைமை.

கரூர் துயரசம்பவம் குறித்து உயர்நீதிமன்றம் சரியாகத்தான் சொல்லி இருக்கிறது விஜய் நேரில் வந்து பார்க்கவில்லை என பத்திரிகை மற்றும் ஊடகங்கள் கூறுகிறது.

விஜய் கூட்டத்திற்கு அனுமதி வாங்கியவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள்மீது வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது, நீதி மன்றம் அக்கட்சி பற்றி கூறி வருகிற நிலையில் அவர்களை (விஜய்யை) பார்த்து நாங்கள் ஏன் பயப்பட வேண்டும், பயந்து நாங்கள் என்ன செய்யப் போகிறோம்? எதுவந்தாலும் நாங்கள் சந்திப்போம் என்றார்.



கரூரில் ஏற்பட்ட துயரச் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் 5 நபர்களுக்கு தலா ரூ.1 லட்சத்திற்கான காசோலைகளையும், உயிரிழந்த 5 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சத்திற்கான காசோலைகளையும் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.




தருமபுரி மாவட்டம் கடகத்தூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு பட்டங்களை தருமபுரி மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மு.க. கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் வழங்கினர். உடன் தருமபுரி எம்.எல்.ஏ., எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் எம்.எல்.ஏ., தடங்கம்.பெ.சுப்ரமணி, அரசு தொழில்பயிற்சி நிலைய முதல்வர் சிவக்குமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உள்ளனர்.